
# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

# விருது விழா – 2025



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்



கவியாசான் பாவலர் சி.சண்முகராஜா



பாவலர் கந்த.ஸ்ரீபஞ்சநாதன்



பாவலர் பவானி தர்மகுலசிங்கம்

இடம்: Scarborough Civic Centre

150 Borough Drive Scarborough, Ont, M1P 4N6.

திகதி: 19-07-2025, சனிக்கிழமை நேரம்: பிற்பகல் 1:00 மணி

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

## விருது விழா

**19, ஜூலை 2025**

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின்
## விருதாளர்கள் – (2011-2024)

**“செந்தமிழ்ச் சிற்பி”**
பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர்
**“இலக்கிய வித்தகர்”**
கவிநாயகர் வி.கந்தவனம்
**“விருத்தக் கவி வித்தகர்”**
பாவலர் வே.இராசலிங்கம்
**“குழந்தைக் கவி வித்தகர்” -**
ஆசிரியர் சபா.அருள்சுப்பிரமணியம்
**“வெண்பாப் புலவர்”**
பாவலர் மு.மயில்வாகனம்
**“கலைக் கவி”**
பாவலர் தா.சண்முகநாதன்

## விருதாளர்கள் – 2025

**பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்**
**“செந்தமிழ்ச் சிற்பி”**
**பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராஜா சின்னத்தம்பி**
**“மரபுக்கவி வித்தகர்”**
**பாவலர் கந்த. சிறீபஞ்சநாதன்**
**“மரபுக்கவி வித்தகர்”**
பாவலர் பவானி தர்மகுலசிங்கம்.
**“மரபுக்கவி வித்தகர்”**

# தலைவரின் வாழ்த்துச் செய்தி




கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் இன்றைய "**விருது விழா**" இன்னொரு புதிய நிகழ்வாக அமைந்துள்ளது. மரபுக் கவிதை ஆளுமைகளான பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், கவியாசான் பாவலர் சி. சண்முகராஜா, பாவலர் கந்த. ஸ்ரீ பஞ்சநாதன், பாவலர் பவானி தர்மகுலசிங்கம் ஆகிய நால்வருக்கும் எமது கழகம் விருது வழங்கிச் சிறப்பிப்பதையிட்டு பெருமைகொள்கின்றது. பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுக்கு "**செந்தமிழ்ச் சிற்பி**", பாவலர் மூவருக்கும் "**மரபுக்கவி வித்தகர்**" என்ற விருது வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது. விருது பெறும் நான்கு ஆளுமைகளுக்கும் எனது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன், கவிஞர்களுக்கு விருது வழங்கி மதிப்புச் செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்மொழிந்தவர் எமது கழகத்தின் முன்னாள் தலைவர் அகணி சுரேஸ் என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த வேளையில் எமது கழகத்தை நிறுவிய நிறுவனர்களான கவிநாயகர் கந்தவனம், பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் ஆகிய இரண்டு மேதைகளையும் எண்ணிப் பார்க்கின்றேன். கனடாவில் தமிழ் மொழி, தமிழர் பண்பாடு வளர அரும்பாடுபட்ட அறிஞர்கள், தம்மிடம் உள்ள அறிவுச் செல்வத்தை எவ்வித பிரதிபலனும் கருதாது, வணிக நோக்கமின்றி அனைவருக்கும் வழங்கியவர்கள் குறிப்பாகக் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய மரபுக் கவிதைப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியவர்களுக்கு யாப்பிலக்கணம், தமிழ் இலக்கியம் கற்பித்தவர்கள். 2011 ஆண்டு கவிஞர்களுக்கெனத் தனியான கழகத்தை நிறுவித் தமது தொடர்ச்சியான கற்பித்தல் மூலம் பல மரபுக் கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள். அவர்களால் உருவாக்கப்பட்டவர்களில் இன்று விருது பெறும் மூவரும் மூத்த கவிஞர்கள் என்பது சிறப்புக்குரியதாகும்.

"**வாழும்போதே வாழ்த்துவோம்**" என்பதற்கமைய, எமது கழகம் வழங்கும் உயரிய விருதைப்பெறும் நால்வரும் உடல், உள நலத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து எம் தமிழ் மொழிக்குத் தொண்டாற்ற வேண்டுமென மீண்டும் வாழ்த்துகிறேன். இந்த வேளையில் எமது விழா சிறப்பாக அமைவதற்கு நிதி, பொருள் உதவிகளை வழங்கிய செயற்குழு அங்கத்தவர்களுக்கும், விருது விழாக் கையேட்டை அழகாகத் தொகுத்துத் தந்த பாவலர் இராஜ்மீரா இராசையா அவர்களுக்கும், கழகத்தின் உறுப்பினர்களுக்கும் குறிப்பாக எமது கவிதைப் பயிலரங்க மாணவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை**
தலைவர்
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.

# பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்



தமிழும் சைவமும் தழைத்தோங்கும் ஈழத்து வடபால் இயற்கையோடு இணைந்தியங்கும் இணுவில் ஊரின் கண்ணே வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை இணையருக்கு இரண்டாவது மகனாக 1939-10-28ல் பிறந்து பஞ்சாட்சரம் என்னும் பெயர் தாங்கிப் பிந்நாளில் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் எனத் தனது பெயரை நிலைநிறுத்தினார்.

கலை, இலக்கியம், இலக்கணம் கற்று அவற்றுடன் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்த பூட்டன், பாட்டன், மாமன், உடன் பிறந்த அண்ணன் ஆகியோரின் வழிகாட்டலில் தனது திறன்களை வளர்த்து இலக்கிய, இலக்கண உலகில் ஆழக் கால்பதித்தவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம், உடுவில் மான்ஸ் ஆங்கிலப் பாடசாலை, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி, நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றில் தனது கல்வியறிவையும் ஆளுமையையும் பெற்று 1964ம் ஆண்டு ஆங்கில ஆசிரியர் நியமனம் பெற்ற இவர் பல பாடசாலைகளில் ஆங்கிலம், எண்கணிதம், தமிழ், சைவசமயம் ஆகிய பாடங்களையும் கற்பித்தார்.

இணுவில் கலை இலக்கியக் கழகம், இணுவைக் கந்தன் இளம் தொண்டர் சபை, புசல்லாவ இலக்கிய வட்டம் என்னும் அமைப்புகளின் நிறுவனருமாவார். குழந்தைக் கவிதைகள், நாடகங்கள், குறும்பாக்கள், ஹைக்கூக் கவிதைகள், சின்னஞ்சிறு கதை, சிறுகதைகள், புதினம், உருவகக் கதைகள், பெருங்காப்பியம், சமூக மற்றும் வீர காவியங்கள் என்பனவற்றோடு திருவூஞ்சல், பிள்ளைத்தமிழ், தூது, அந்தாதி, திருவிரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, தலபுராணங்கள், பள்ளியெழுச்சி, பதிகங்கள் என்ற வகையில் அமைந்த படைப்புக்களோடு இலக்கியக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றையும் தமிழுலகிற்குத் தந்துள்ளார். ஐம்பது வரையிலான நூல்களுக்கு முன்னுரை, அணிந்துரை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய 'தமிழ் இலக்கியப் பூங்கா' என்னும் இலக்கண நூல் ஏழு பதிப்புகளாக வெளிவந்து தமிழ் மாணவர்களுக்குப் பேருதவி புரிந்து நிற்கிறது.

இவர் சிறந்த மேடைப் பேச்சாளர். தமிழையும் தமிழர் பண்பாட்டையும் தலைமுறை தலைமுறையாகப் பேண வேண்டும் என விரும்பும் இவர் இலங்கை, இந்தியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், நியூசிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் தமிழ், அரசியல், ஆன்மீக உரைகளை நிகழ்த்தியுள்ளார்.

இவர் இலங்கையில் கலைச்செல்வி, இந்துசாதனம், உதயசூரியன் ஆகிய பத்திரிகைகளின் துணையாசிரியராகவும் கனடாவின் உங்கள் நண்பன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் மகுடம் பத்திரிகையின் ஆலோசக ஆசிரியராகவும் தமிழ் நாட்டுச் செங்காந்தள் பத்திரிகையின் ஆலோசக ஆசிரியராகவும் விளங்கினார். இவர் எழுதிய பல பக்திப் பாடல்களும் தாயக எழுச்சிப் பாடல்களும் பிரபல இலங்கை, இந்தியப் பாடகர்களாற் பாடப்பட்டு இசைத்தட்டுகளாக வெளிவந்துள்ளன.

இவர் சிறந்த கவிதை நூலுக்கான இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு, சிறந்த கவிதை நூலுக்கான கலை இலக்கியப் பேரவை விருது மற்றும் வெவ்வேறு அமைப்புகளால் வழங்கப்பட்ட ஞான ஏந்தல், கவிஞானி, கவிக்கனி, வித்தியா பூசணம், இந்துவின் மகுடம், இனமான வேழம், தமிழ்ப் பெருமை சேர் ஆளுமை, ஈழத்து இளங்கோ, தமிழ் மரபுக் காவலர், வாழ்நாட் சாதனையாளர் என்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.

**பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்** அவர்களது வாழ்நாள் தமிழ் இலக்கியப் பணியையும், மரபுக் கவிதை இலக்கியப் பணியையும் பாராட்டி, **செந்தமிழ்ச் சிற்பி** என்னும் விருதை அவருக்கு வழங்கிச் சிறப்பளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

# பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராஜா சின்னத்தம்பி



திரு. சண்முகராஜா சின்னத்தம்பி அவர்கள். இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை இலங்கையில் திருகோணமலை சரசுவதி வித்தியாலயத்திலும், திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியிலும், மேல்நிலைக் கல்வியை நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்றவர்.

**துறைசார் கல்வியும் பணியும் –** மேல்நிலைக் கல்வியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் (1970) பெற்று, கொழும்பு அரசினர் பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவிலும், யாழ் பருத்தித்துறை மந்திகை மருத்துவ மனையிலும் 4 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த செவிலியர் பட்ட மேற்படிப்புக் கல்லூரியில் கல்வியியல் இளநிலைப் பட்டமும் (1977) இலங்கைப் பல்கலைக்கழகம், பெரதேனியா, மருத்துவத்துறை, மருத்துவக் கல்வியியல் பிரிவில் கல்வியியல் விஞ்ஞானக் கற்கை நெறியில் தராதரப் பத்திரமும் (1981) பெற்றார். யாழ்ப்பாணம் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், மட்டக்களப்பு செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், உதவி அதிபராகவும், ஓமான் மஸ்கட் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிநெறிப் பாடத்திட்ட உருவாக்கக் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும், மூத்த விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

1999இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்ததைத் தொடர்ந்து சென்ரனியல் கல்லூரியில் மகளிர் நோய், மகப்பேற்று பராமரிப்புத்துறையிலும் (2000) ஜோர்ஜ் பிரவுண் கல்லூரியில் அவசர நோயாளர் சிகிச்சைப் பராமரிப்புத் துறையிலும் (2001) சிறப்புப் பயிற்சி நெறிகளை நிறைவுசெய்தார். 2001ஆம் ஆண்டிலிருந்து கனடா ரொறொன்ரோ கிழக்குப் பொது மருத்துவமனையின் அவசர நோயாளர் சிகிச்சைப் பிரிவில் 11 ஆண்டுகள் மேலாளராகக் கடமையாற்றி 2013ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். தற்போது ரொறொன்ரோ ஜே. ஆர். எஸ். கல்லூரி மருத்துவப் பிரிவில் பகுதி நேர விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

அமரர் கவிநாயகர் கந்தவனம், அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் இருவரிடமும் யாப்பிலக்கணம் பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கனடா வளாகத்தில் 2018ஆம் ஆண்டு தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார்.


**சமூகம், தமிழ் மொழி தொடர்பான தன்னார்வப் பணிகள் –** தன்னார்வ மருத்துவ உதவி அமைப்பான சௌக்கியதான இயக்கத்தின் யாழ் கிளையின் முன்னாள் அமைப்பாளராகவும், நெடுந்தீவு பாடசாலைகளின் கனடா பழைய மாணவர் மன்றத்தின் செயலாளராகவும், தலைவராகவும், நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் பொருளாளராகவும், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொருளாளராகவும் தொண்டாற்றியவர். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் ஆரம்பகாலத் தலைவராகவும், கனடா, தொல்காப்பிய மன்றத்தின் செயலாளராகவும் பணியாற்றியவர். மாவிலிமைந்தன் என்ற புனை பெயரில் கனடாவிலிருந்து வெளிவரும் தாய்வீடு, தமிழர் தகவல், உதயன், தமிழர் செந்தாமரை போன்ற செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் பலவற்றிலும், தமிழகத்திலிருந்து வெளியாகும் கவிதை உறவு, இனிய நந்தவனம் போன்ற சஞ்சிகைகளிலும கவிதைகளையும், தமிழியல், தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும், மருத்துவக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். கவியரங்கங்கள், ஆய்வரங்கங்கள், நூலாய்வுகள், பட்டிமன்றங்கள் போன்ற நிகழ்வுகளில் இவரின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன. கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் ஆதரவில் கவிதை இலக்கிய இலக்கணப் பயிலரங்க வகுப்புகளை அதன் ஆசிரியராக இருந்து நடத்தி வருகின்றார். கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் செயற்பாடுகளிலும் கனடாத்தமிழ்க் கவிஞர் கழகத்தின் பிரதிநிதியாகக் கலந்து பங்காற்றியவர், தமிழ் நாடு அரசின் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் செயற்படுத்திக் கொண்டிருக்கும் தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தில் இவரின் பங்களிப்பு சிறப்பான அங்கீகாரம் பெற்றுள்ளது. இப்பொழுது கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் பொருளாளராகப் பணியாற்றுகின்றார்.

**படைப்புகளும் விருதுகளும் –** வைகறை வானம் என்னும் முதலாவது கவிதைத் தொகுப்பு நூல் 2012ஆம் ஆண்டும், இரண்டாவது கவிதைத் தொகுப்பு நூலான மனவெளி மேகங்கள் 2022 ஆண்டும் கனடாவில் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு திருவள்ளுவர் இலக்கிய மன்றமும் நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய சிறந்த தமிழ் மரபுக் கவிதை நூலுக்கான போட்டியில் இவரது மனவெளி மேகங்கள் கவிதை நூல் முதல் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது (2021). இந்த நூல் வெளியீட்டு விழாவில் கனடாத் தொல்காப்பிய மன்றத்தினால் இவருக்குக் கவி ஆசான் என்னும் விருது வழங்கப்பட்டது. மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திசூடியிலுள்ள 110 தலைப்புகளில் எழுதிய முனையிலே முகத்து நில் கவிதைத் தொகுப்பு நூல் 2023 ஜனவரி மாதம் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டது. இதற்காக உலகத் தமிழ்ச் சங்கத்தால் உலக மகாகவி பாரதியார் விருது இவருக்கு வழங்கப்பட்டது. இந்தநூலும், ~எதுசரி, ஏன்சரி?| என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலும், கவிதை இலக்கண நூலும் இந்த ஆண்டு வெளிவர இருக்கின்றன. இவர் எழுதிய 25க்கும் மேற்பட்ட பாடல்கள் ஒலி, ஒளி இறுவெட்டுகளாக வெளிவந்திருக்கின்றன. மொன்றியல் தமிழாழி ஊடகம் இவருக்குப் பாடலாசிரியருக்கான விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. அத்துடன் கனடிய நுண்கலைக் கல்வி நிலையங்களில் வாய்ப்பாட்டு, நடனம், நாட்டிய நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் இவர் தனது கவிதைகள், பாடல்கள் மூலம் பங்களிப்புச் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருக்கு சமுகத் தன்னார்வத் தொண்டர் பணிக்கான ஒன்ராரியோ மாகாண அரசின் விருதும் (2014), கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் பாவலர் விருதும் (2022), சிறந்த தமிழ்ப்பணிக்காக, நினைவுகள் இணையத்தளத்தின் விருதும் (2020), தமிழர் தகவல் மாத இதழின் தமிழ் இலக்கியப் பணிக்கான விருதும், தங்கப் பதக்கமும் (2022) வழங்கப்பெற்றுள்ளன.

**பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராஜா சின்னத்தம்பி** அவர்களது வாழ்நாள் தமிழ் இலக்கியப் பணியையும், மரபுக் கவிதை இலக்கியப் பணியையும் பாராட்டி, “**மரபுக்கவி வித்தகர்”** என்னும் விருதை அவருக்கு வழங்கிச் சிறப்பளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

# பாவலர் கந்த. சிறீபஞ்சநாதன்



வைத்தியமேதைகள் ,ஆசிரியர்கள் ,வடமோடி நாட்டுக்கூத்துக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் குதிரை, காவடி ஆட்டக் கலைஞர்கள், சிவனருட் செல்வர்களையும் தந்து புகழ் பூத்த,வட்டூர் மேற்கு, வட்டூர் வடக்குக் கலைநகரிலே சிறப்பு மிகு கட்டடக் கலைஞர் கணபதியார் கந்தசாமி அவர்கட்கும், கணபதிப்பிள்ளையின் மகள் அன்னலட்சுமிக்கும் கடைக் குட்டியாகப் பிறந்தவர் கந்த. சிறீ பஞ்சநாதன்.

ஆரம்பக் கல்வியை சேர். பொன். இராமநாதன் திறந்து வைத்த வட்டு மேற்கு திருநாவுக்கரசு வித்தியாசாலையிலும், உயர்கல்வியைச் சோமசுந்தரப்புலவர் கற்பித்த, வட்டு இந்துக் கல்லூரியிலும், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியிலும், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியிலும் கற்றார்.

வட்டு சுகாதார சேவை விழாவில், எமது கலைநகர் நேருஜி கலா மன்றம் பங்கு பற்றிப் பல பரிசுகளைப் பெற்றதுடன், நாடகப் போட்டியில் "அணையா விளக்கு" என்ற நாடகம் முதல் பரிசு பெற்றது. அதில் கதாநாயகியாக நடித்தார். யாழ் மாவட்ட, சனசமூக நிலையங்களுக் கிடையேயான கலை கலாச்சாரப் போட்டியில், நாட்டார் பாடலில் வெற்றி பெற்று, இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்தில் பாடினார். அவரது மன்றம் “சேரன் செங்குட்டுவன்” என்ற நாடகத்திலும் பேச்சுப் போட்டியிலும், முதற்பரிசு பெற்றது. வட்டு இந்துக் கல்லூரியில் "திதியனின் காதலி" என்ற நாடகத்தை அரங்கேற்றினார். நாடகத்திற்கு அவரும் அவரது நண்பர் சேகரனும் பயிற்சி வழங்கினார்கள். விவேகானந்தா நாடக மன்றப் பதாகையின் கீழ், குரும்பசிட்டி ஈழகேசரி பொன்னையா அவர்களின் ஞாபகார்த்த நாடகப் போட்டியில் கலைநகர் கலைஞர்களுடன் சேர்ந்து பங்கு பற்றிப் பரிசில் பெற்றார். இந்நாடகத்தை பின்பு "இரத்தப் பரிசு" என்று மாற்றப்பட்டு நேருஜி கலாமன்ற பதாகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழ விடுதலைப் பிரகடனக் களத்தில் மேடை ஏற்றினர். இந்நாடகம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இப்போதும் இந்நாடகத்தைக் கலைநகர் நேருஜி கலா மன்றத்தினர் பெருமையுடன் இலண்டனில் மேடையேற்றி வருகின்றனர்.

சார் ஜான் கொத்தலாவலை பிரதமராக இருக்கையில் வட்டுக்கோட்டைக்கு வந்த போது, சிறு வயதில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் தலைமையில், கறுப்பு கொடி காட்டினார். 1961ம் ஆண்டு கச்சேரியில் சிறுவயதில் உண்ணாவிரதம் இருந்தார் .

டாக்டர் ராஜசுந்தரம் மற்றும் எஸ் ஏ டேவிட் ஐயா, சந்ததியார் சேர்ந்து நடத்திய காந்தியம் என்ற தொண்டு நிறுவனத்திற்கு வட்டுத் தொகுதியின் தலைவராக இருந்து, முழு ஆதரவும் அளித்தார். சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் எழுது வினைஞர் உத்தியோகம் கிடைத்தது. காசாளராகப் பதவி உயர்வு கிடைத்தது. அத்துடன், தொழிற் சங்கத் தலைவராகத் தெரிவு செய்தார்கள். சங்க வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டு உழைத்தார். மீண்டும் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். நன்கு உழைத்தார். வளர்ச்சி பெற்றது .கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்யும் முன்பே, தனது வருவாய்க்காக, G.C.E O/L மாணவருக்கு உயிரியலும், இரசாயனவியலும் கற்பித்துக் கொண்டிருந்தார். அவரது ஆசிரியர் தொழில் மிகவும் சிறப்பாகப் போய்க்கொண்டிருந்தது. அவர் உறவினரிடம் பணம் வாங்குவதில்லை. கொழும்பு துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனத்தில் காசாளர் பதவி கிடைத்தது. அங்கும் திறமையாக வேலை செய்தார். 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் இறக்க வேண்டியவர், இறைவன் அருளால் தப்பி இன்று கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் .

கனடாவில் அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர், அமரர் கவிநாயகர் கந்தவனம் ஆகியோரிடம் முறையாக யாப்பிலக்கணம் கற்று மரபுக் கவிதைகளை ஆக்கும் திறன் பெற்ற இவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற பதவிகளை வகித்து கழகத்தின் உயர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்தார். இன்றும் கழக வளர்ச்சிக்காகத் தனது பங்களிப்பை வழங்கி வரும் இவர் கனடா இந்து சமயப் பேரவையின் தற்போதைய உபதலைவராவார். இவர் உலக திருக்குறள் மையத்தின் உறுப்பினராக இணைந்து திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருவதோடு விருதுகளும் பெற்று வருகின்றார். பொதிகைப் புதுமலர்கள், அன்புத் தமிழமுதம், கவிச்சரம் ஆகிய கவிதைத் தொகுப்பு நூல்களில் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. மேடை நிகழ்ச்சிகளிலும் காணொளி நிகழ்ச்சிகளிலும் மரபுக்கவிதைகளை வழங்கி வருகின்றார். இவருக்கு வட்டுக்கோட்டை நேருஜீ சனசமூகநிலையமும், கிராம முன்னேற்றச் சங்கமும், கலாமன்றமும் முத்தமிழ்க் கவிஞர் என்ற விருதும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

**பாவலர் கந்த.** சிறீபஞ்சநாதன் அவர்களது வாழ்நாள் தமிழ் இலக்கியப் பணியையும், மரபுக் கவிதை இலக்கியப் பணியையும் பாராட்டி, **"மரபுக்கவி வித்தகர்"** என்னும் விருதை அவருக்கு வழங்கிச் சிறப்பளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

# பாவலர் பவானி தர்மகுலசிங்கம்



தமிழ் இலக்கிய வரலாற்றில், ஈழத்து மரபுக் கவிஞர் என்ற வகையில் தனக்கெனத் தனித்தடம் பதித்து, மரபுக்கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், நூலாசிரியர், பாடலாசிரியர், இதழாசிரியர் எனப் பல கோணங்களில் தன் ஆளுமைகளை வெளிப்படுத்திக் கனடா நாட்டு அரசாங்கத் திணைக்களங்களில் ஒன்றான Veterans Affairs Department இல் கால்பதித்துப் பல நிறுவனங்களிலும் பணியாற்றி, இறுதியாகப் பல ஆண்டுகளாக ஓய்வுபெறும் வரை கனடா நாட்டின் முதன்மை வங்கியாகிய Bank of Montreal இன் தலைமையகத்தில் தொழில் புரிந்ததோடு, கனடாவின் சட்டதிட்டங்களுக்கமைவான திருமணப் பதிவாளராகவும் இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றும் 'பவித்திரா' என்னும் புனைபெயருடன் இலக்கிய உலகில் வலம் வரும், பாவலர் பவானி தர்மகுலசிங்கம் அவர்கள், எழில்மிகு யாழ் வடமராட்சியின் அல்வாய் எனும் சிற்றூரில் திரு.திருமதி.முருகேசு பவா மண இணையருக்கு முதல் மகளாகப் பிறந்தார்.

இவரது தந்தையார் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கல்வி கற்றுத் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர். தாயாரும் ஆசிரியராவார்.

பவானி அவர்கள், தனது தொடக்கக் கல்வியைப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையிலும், உயர்கல்வியை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் விஞ்ஞானத் துறையில் பயின்றவர். கனடாவில் இயங்கிவரும் Beta College இல் Computerized Accounting (கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல்) பாடத்தில் டிப்ளோமாப் பட்டமும் பெற்றவர்.

மேலும், கனடாவில் இயங்கி வரும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் மரபுக் கவிதை வகுப்பில் இணைந்து, தமிழறிஞர்களான, பண்டிதர் ம.செ அலெக்ஸ்சாந்தர் மற்றும் கவிநாயகர் கந்தவனம் ஆகியோரிடம் முறையே யாப்பிலக்கணம், இலக்கியம் என்பவற்றைக் கற்றுத் தேர்ந்து அவ்வமைப்பிடமிருந்து பாவலர் விருதும் கிடைக்கப் பெற்றவர்.

1971 இல் அரசாங்க நிர்வாக சேவையில் எழுதுவினைஞராக இணைந்துகொண்ட இவர், 1987 வரை கொழும்பிலும், வடபகுதியிலுள்ள பல திணைக்களங்களிலும் பணியாற்றியவர். இவர் மும்மொழிகளில் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) எழுதுவதிலும், பேசுவதிலும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்ததுடன், நாட்டிலுள்ள மூவகை இனங்களையும் கவர்ந்த உன்னத சேவையாளராகவும் விளங்கினார். சேவைக்காலங்களில் பரீட்சைகள் அத்தனையையும் வென்று பதவி உயர்வுகளும் பெற்றவர்.

பாடசாலைக் காலங்களில் எழுத்து, பேச்சு, கட்டுரைப் போட்டிகளிலும், வடமராட்சி, வடமாகாண ஆசிரிய சங்கங்களால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும், முன்னிலை வகித்துப் பல பரிசில்களையும் பதக்கங்களையும் தட்டிக் கொண்டவர்.

இவரால் புனையப்பட்ட கலை, இலக்கிய ஆக்கங்கள் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் விரும்பி வரவேற்கப்பட்டன. இவையே இவருக்குக் கலை, இலக்கியத்துறைக்கான பலமான அடித்தளமாகியது.

1987ஆம் ஆண்டு கனடா மண்ணிற்குப் புலம்பெயர்ந்த, சிறந்த கவித்துவ, எழுத்தாற்றல் மிக்க பவானி அவர்கள், உலகத் தமிழர், ஈழமுரசு, ஈழநாடு, நம்நாடு, உதயன், முழக்கம், இருசு, ஈழநாதம், வெள்ளிநாதம் போன்ற பத்திரிகைகளிலும், உலகின் பல்வேறு இணையத்தளங்கள், சஞ்சிகைகளிலும் பவித்திரா, மெல்லியல், பவானி ஆகிய பெயர்களில் தொடர்ச்சியாக ஆக்கங்களை எழுதியவர்.

இவரது படைப்புக்களான, பண்டார வன்னியன், கப்பலோட்டிய தமிழன் போன்ற உணர்வெழுச்சி மிக்க சிறுவர் நாடகங்கள் கனடாவில் பல இடங்களில் மேடையேற்றப்பட்டன.

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தன் இனத்திற்காய், மொழிக்காய் உரிமைப்பற்றோடு திகழும் இவர் தாயக மக்களுக்காற்றிய பணிகளுக்காகக் கனடிய அரசாங்கத்தின் விருதினைப் பெற்றவர். கவியரங்க நிகழ்வுகளுக்குத் தலைமையேற்பதுடன், இணையவழிக் கருத்தரங்குகள், கவியரங்குகள், ஆய்வரங்குகள் எனத் தமிழே மூச்செனக் கருதிப் பயணித்து வருபவர்.

கவிஞர் பவானி அவர்கள் தமிழை உயிராக மதிப்பவர். தந்தை வழிக் கவிதை மரபினைப் பின்பற்றி வருபவர். இலக்கணம் வழுவாத இலக்கியச் சுவை நிரம்பப் பெற்ற எழுத்துக்களையே இவரது படைப்புக்களில் காண முடியும்.

இவர் படைத்த ஆக்கங்களான தேசிய நலன் சார்ந்த, சமூக சீர் திருத்தக் கவிதைகளை உள்ளடக்கிய "வியன்களம்"- மரபுக் கவிதைத் தொகுப்பு, மற்றும் "கொற்றவை" - இசைத் தொகுப்பு என்பன கனடாவில் ரொறொன்றோ, மொன்றியல் ஆகிய இரு இடங்களிலும் வெளியிடப்பட்டுப் பிரித்தானியா, பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் அறிமுகஞ் செய்யப்பட்டன.

இவரது கொற்றவை இசைத் தொகுப்பிலுள்ள ஈழத்தாய் பற்றிய பாடலுக்குக் கிழக்கிலங்கை விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட நடனக் காட்சியானது, உலக நாடுகளில் அரங்கேற்றப்பட்டு வருகிறது. இலங்கையின் தலைநகரிலுள்ள களனிப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் அமைப்பினரும் , இப்பாடலுக்கு நடனமாடி முதலாவது பரிசினை வென்றமையானது, இவரது பாடல் வரிகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும் .

இவர், பாவலர் விருது, கனேடிய மண்ணில் தனது தாயக மக்களுக்காற்றிய தொண்டுக்கான விருது, தமிழ்நாடு பாரதியார் இலக்கியக் கழகம் வழங்கிய "பாரதி கண்டபுதுமைப் பெண்கள்" சாதனையாளர் விருது, பைரவி நுண்கலைக் கூடம் வழங்கிய விருதுகள், கம்பன் விழா கவியரங்கம்- முதற் பரிசுக்கான விருது, கனடாத் தமிழாழிக் கவியரங்கச்.சிறந்த படைப்புக்கான விருது என்பவற்றைப் பெற்றுக்கொண்டவர்.

இவர், கடந்த காலத்தில் கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தின் செயலாளராகப் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர். மேலும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் துணைத் தலைவராகவும், துணைச் செயலாளராகவும் கடமையாற்றியதுடன், தற்போது இதன் செயலாளராகவும் இயங்கி வருகிறார்.

பாவலர் பவானி தர்மகுலசிங்கம். அவர்களது வாழ்நாள் தமிழ் இலக்கியப் பணியையும், மரபுக் கவிதை இலக்கியப் பணியையும் பாராட்டி, "**மரபுக்கவி வித்தகர்**" என்னும் விருதை அவருக்கு வழங்கிச் சிறப்பளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

# நன்றி நவிலல்



கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்திய விருது விழா - 2025, வெற்றி விழாவாக நிறைவு பெற்றுள்ளது. இந்த வெற்றி பலரது உழைப்பாலும், பங்களிப்பாலும் சாத்தியமானதாகும். இந்த வேளையில் அனைவருக்கும் எமது கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. குறிப்பாக நிதியுதவி வழங்கிய செயற்குழு உறுப்பினர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், மாணவர்கள், விழா மலருக்கான முன் அட்டையை அழகாக வடிவமைத்துத் தந்த இரா.குணசீலன், விழாவுக்கான அழைப்பிதழைத் தயாரித்து வழங்கிய பவானந்தன் செல்வராசா (மட்டக்களப்பு), விருதாளர்களின் தகவல்களைத் திரட்டித் தொகுத்துத் தந்த எமது கழகத்தின் துணைத்தலைவர் பாவலர் இராஜ்மீரா இராசையா, விழா மலர், விருது பெறுவோருக்கான சான்றிதழ் ஆகியவற்றை வடிவமைத்துத் தந்த பாவலர் அகணி சுரேஸ், அவற்றை அச்சாக்கித் தந்த MultiSmart Solution பதிப்பகத்தாருக்கும், எமது விழாவை அறிவித்தல் செய்த கனடா உதயன் பத்திரிகை, ,CMR 101.3, East FM 102.7 பண்பலை வானொலிகளுக்கும், மண்டபத்தை வழங்கிய CITY OF TORONTO நிருவாகத்திற்கும், வருகைதந்து விழாவைச் சிறப்பித்த அனைத்து உறவுகளுக்கும் எமது கழகத்தின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாவலர் சுகந்தி மார்க்கண்டு
துணைச் செயலாளர்.
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.

## கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் -செயற்குழு 2023-2025



முன்வரிசை இடமிருந்து வலம்

திருமதி.இராஜ்மீரா இராசையா (துணைத் தலைவர்)

திரு.சண்முகராஜா சின்னத்தம்பி (பொருளாளர்)

திரு.குமரகுரு கணபதிப்பிள்ளை (தலைவர்)

திருமதி.பவானி தர்மகுலசிங்கம் (செயலாளர்)

திருமதி.சுகந்தி மார்க்கண்டு (துணைச் செயலாளர்)

பின்வரிசை இடமிருந்து வலம் செயலவை உறுப்பினர்கள்

திருமதி.இறாஜினி சுபாகரன்

திரு.அகணி சுரேஸ்

திரு.கந்த ஸ்ரீபஞ்சநாதன்

திரு.மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை

திரு.சயந்தன் பசுபதி